# சபைகளுக்கு திரியேக தேவனின் ஆசீர்கள்:

Pr. K.Joseph

வெளி-1: 5 *கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.*
இந்தப் போதகத்தின் மூலமாக:

- சபைகளுக்குக் தேவன் கொடுக்க வேண்டியவைகளைக் குறித்தும்,
- திரியேக தேவனுடைய மகத்துவங்களைக் குறித்தும்,
- தேவன் சபைகளைப் பார்க்கும் விதத்தைக் குறித்தும்

உங்களுக்குக் கற்றுக்கொடுக்க விரும்புகிறேன். பரிசுத்த ஆவியானவர் நமக்குக் கற்றுக்கொடுத்து நம்மைப் பெலப்படுத்திட ஜெபிப்போமா!
வெளி-1: 4 *யோவான் ஆசியாவிலுள்ள ஏழு* ***சபைகளுக்கும்*** *எழுதுகிறதாவது:*

## I. சபைகள்:

சபை என்பது கிறிஸ்துவின் சரீரமாக இருக்கிறது என்றும், பரிசுத்தவான்களின் ஐக்கியமாக இருக்கிறது என்றும் நாம் ஏற்கெனவே அறிந்திருக்கிறோம். எபேசியர்-1: 23 *எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய* ***சீரமான சபைக்கு*** *அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்.* தேவன் சபைகளைப் பார்க்கும் விதம் என்னவென்னறால், எல்லா சபைகளையும் அவர் அன்போடு பார்க்கிறார், தம்முடைய அன்பிற்குரியவைகளாகவே பார்க்கிறார். நாம் சபைகளை எப்படிப் பார்க்கிறோம், சபைகளைக் குறித்த எப்படி விமர்சிக்கிறோம்? இன்றைக்கு நாம் வாழும் உலகில் பலவகைப்பட்ட சபைகள் உள்ளன.

- பாரம்பரிய சபைகள்,
- ஆவிக்குரிய சபைகள்,
- மிஷனரி சபைகள்

என பலவகைகளில் பார்க்கலாம். எல்லா சபைகளுக்கும் தேவன் தம்முடைய ஆசீர்களைக் கொடுக்க வேண்டும் என்று விரும்புகிறார். அதனால் தான் ஆசியாவிலுள்ள ஒரு தனிசபைக்கு எழுதாமல் அங்கு உள்ள ஏழு சபைகளுக்கும் எழுதும்படி யோவானுக்குத் தேவன் சொன்னார். சபைகளில் நிறைகளும் இருக்கின்றன, குறைகளும் இருக்கின்றன, குறைகள் இருந்தால் அவைகளை மாற்றிக்கொண்டு மனந்திரும்புமாறு சபைகளுக்கு அழைப்புக் கொடுக்கிறார், சபைகளில் உள்ள நிறைகளுக்குத் தக்க பலன் உண்டு என்று சபைகளைப் பெலப்படுத்துகிறார். சபை என்பது தேவனுடைய இருதயத்தில் முக்கிய இடத்தைப் பிடித்திருக்கிறது. சபைக்கு விரோதமாக சவுல் எழும்பியபோது இயேசு கிறிஸ்துவே குறுக்கிட்டு: *"சவுலே சவுலே நீ ஏன் என்னைத் துன்பப்படுத்துகிறாய்"* (அப்-9: 4) என்று கேட்டார்.

## II. திரியேக தேவன்:

1. பிதாவாகிய தேவன்
2. குமாரனாகிய இயேசு கிறிஸ்து
3. பரிசுத்த ஆவியானவர்

**பிதாவாகிய தேவனால்** சபையைக் குறித்த திட்டம் உருவாக்கப்பட்டு பழைய ஏற்பாட்டுக் காலப் பரிசுத்தவான்களுக்கு வெளிப்படுத்தப்படாத மறைபொருளாக வைக்கப்பட்டடிருந்தது. புதிய ஏற்பாட்டுக் காலத்திலே தேவன் அந்த மறைபொருளை வெளிப்படுத்தச் சித்தமானார். **குமாரனாகிய இயேசு கிறிஸ்து** சபைக்காக தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்: *கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக*

*அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்.* (எபே-5: 27)

**பரிசுத்த ஆவியானவர்** சகல சத்தியத்திற்குள்ளும், சுத்திகரிப்பிற்குள்ளும் சபையை நடத்திச் செல்கிறவராக இப்பொழுதும் சபை நடுவில் அசைவாடிக்கொண்டிருக்கிறார்.

வெளி-1: 4-5 *யோவான் ஆசியாவிலுள்ள ஏழுசபைகளுக்கும் எழுதுகிறதாவது: இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமானவராலும், அவருடைய சிங்காசனத்திற்குமுன்பாக இருக்கிற ஏழு ஆவிகளாலும், உண்மையுள்ள சாட்சியும், மரித்தோரிலிருந்து முதற்பிறந்தவரும், பூமியின் ராஜாக்களுக்கு அதிபதியுமாகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.* இந்தத் திரியேக தேவன் எப்படிப்பட்டவர் என்பதை இந்த வசனம் குறிப்பிடுகிறது.

**பிதாவாகிய தேவன்:**
இருக்கிறவர்
இருந்தவர்
வருகிறவர்
(முக்காலத்திற்கும் உரியவர், முடிவே இல்லாதவர்)

**பரிசுத்த ஆவியானவர்:**
சிங்காசனத்திற்கு முன் இருக்கும் ஆவி
ஏழு ஆவிகள் என்று அழைக்கப்படுபவர்
(தேவனின் ஆளுகையை அறிந்தவர், பூரணமானவர், எங்கும் நிறைந்தவர்)

**குமாரனாகிய இயேசு:**
உண்மையுள்ள சாட்சி
மரித்தோரிலிருந்து முதற்பிறந்தவர்
பூமியின் ராஜாக்களுக்கு அதிபதி (Prince)
(மரணத்தை ஜெயித்தவர், ராஜாதி ராஜா)

### III. சபைகளுக்குத் தேவன் கொடுக்கும் ஆசீர்கள்:

*கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.*

“கிருபை” என்பது மாறாத, குறையாத, நிபந்தனையற்ற தேவனுடைய அன்பைக் குறிக்கிறது. சபைகள் தேவன் கொடுக்கும் அன்பால் நிரப்பப்பட்டு அந்த அன்பிலே வளர வேண்டும் என்று தேவன் விரும்பகிறார். சபைக்கு தேவன் காட்டும் அன்பைக் குறித்த வெளிப்பாட்டை சபைகள் பெற்றாக வேண்டும். எபேசியர்-1: 17-19ல் பவுலுடைய ஜெபத்தைப் பாருங்கள்: *நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி, சகல* பரிசுத்தவான்களோடுங்கூட *கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து, அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும் வேண்டிக்கொள்கிறேன்.* சபை அன்பிலே நிரம்பியிருக்க வேண்டும், அன்பால் நடத்தப்பட வேண்டும், அன்பை மற்றவர்களுக்குக் கொடுத்திட வேண்டும். சகலமும் அன்பினால் செய்யப்படுவதாக. 1கொரிந்தியர் 13ஆம் அதிகாரத்தில் அன்பைக் குறித்த குணாதிசயங்கள் கொடுக்கப்பட்டிருப்பதை நாம் பார்க்கிறோம். அடிக்கடி அதை வாசித்து நம்முடைய ஜெபமாக்குவோமாக. தேவன் சபையை அன்போடு பார்க்கிறார், அன்போடு நடத்துகிறார், நாமும் மற்றவர்களை அன்போடு பார்த்து அன்போடு நடத்த வேண்டும். அன்பு வரும்போது மன்னிப்பு, விட்டுக்கொடுத்தல், தாழ்ந்துபோகுதல், சகிப்புத்தன்மை, இரக்கம் காட்டுதல், உதவிசெய்தல், புரிந்துகொள்ளுதல் போன்ற சுபாவங்கள் நமக்குள் பெருகி வெளிப்பட ஆரம்பிக்கும்.

“சமாதானம்” என்பது தேவன் சபைக்குக் கொடுக்கும் மற்றொரு ஆசீராக இருக்கிறது. சமாதானம் என்பதற்கு இரண்டு வேறுபட்ட அர்த்தங்கள் உள்ளன. **முதலாவது** நமக்குள் காணப்படும் மனஅமைதியை இது குறிக்கிறது. கலக்கமற்ற, குழப்பமற்ற தெளிவான

சந்தோஷச் சூழலை இது காட்டுகிறது. தேவனுக்குள் அவருடைய பிரசன்னதிற்குள் சபை திருப்தியடைந்திருக்க வேண்டும். சபைக்குள் இருக்கும் மக்கள் குழப்பத்திலிருப்பதையோ, கலங்கித் தவிப்பதையோ தேவன் விரும்பவில்லை. நாம் மனஅமைதியை உடையவர்களாகக் காணப்பட வேண்டும் என்று நமக்கு சமாதானத்தை ஆசீராகத் தேவன் தருகிறார்.
பிலிப்பியர்-4: 6-7 *நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான* ***தேவசமாதானம்*** *உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்.*

**இரண்டாவது** அர்த்தம் என்னவென்றால் ஒருவர் ஒருவரோடு சண்டையில்லாமல், ஒருமனமுள்ளவர்களாக, சமாதானத்துடன் ஐக்கியப்பட்டு வாழ்வதையும் இது காட்டுகிறது. சபைக்குள்ளும், சபைகளுக்குள்ளும் சமாதானம் ஆளுகை செய்ய வேண்டும். நம்முடைய தேவன் அவர் சமாதானக் காரணர், சமாதானப் பிரபு சாலேமின் ராஜா ஆவார். ரோமர்-12: 18 *கூடுமானால் உங்களாலான மட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்.* பவுல் சபைகளுக்கு எழுதுகிற நிரூபங்களில் அடிக்கடி இதே வாழ்த்துதலைக் கொடுத்து எழுதியிருப்பதை நாம் பார்க்கிறோம்.

***ரோமர்-1: 3*** *நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.*
***1கொரிந்தியர்-1: 3*** *நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.*
***2கொரிந்தியர்-1: 2*** *நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.*
***கலாத்தியர்-1: 3*** *பிதாவாகிய தேவனாலும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.*
***எபேசியர்-1: 2*** *நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.*
***எபேசியர்-6: 23-24*** *பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும், சகோதரருக்குச் சமாதானமும் விசுவாசத்தோடுகூடிய அன்பும் உண்டாவதாக. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் அழியாத அன்புடனே அன்புகூருகிற யாவரோடும் கிருபை உண்டாயிருப்பதாக.*
***பிலிப்பியர்-1: 2*** *நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.*
***கொலோசெயர்-1: 2*** *கொலோசே பட்டணத்தில் கிறிஸ்துவுக்குள் பரிசுத்தவான்களும் விசுவாசிகளுமாயிருக்கிற சகோதரர்களுக்கு எழுதுகிறதாவது: நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக..*
***1தெசலோனிக்கேயர்-1: 1*** *பிதாவாகிய தேவனுக்குள்ளும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள்ளும் இருக்கிற தெசலோனிக்கேயர் சபைக்கு எழுதுகிறதாவது: நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.*
***2தெசலோனிக்கேயர்-1: 2*** *நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.*